18 JUL 2014

# கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை
## மூன்றாம் வருட பொதுக் கலைமாணித் தேர்வு 2009/2010
## (மார்ச்-மே 2014) (வெளிவாரி)

## EDU 301 வகுப்பறைக் கற்பித்தலில் திட்டமிடலும் முகாமைத்துவமும்

நேரம் : 03 மணித்தியாலங்கள்

ஐந்து வினாக்களுக்கு விடை தருக.

---

01.(அ) பாடசாலையில் நோக்கம் குறிக்கோள், விஷேட குறிக்கோள் என்பன ஒரே கருத்திலே பிரயோகிக்கப்படினும் பாடசாலைச் செயற்பாடுகளில் அவை வெவ்வேறான எதிர்பார்ப்புகளில் பிரயோகிக்கப்படுகின்றன, இதனடிப்படையில் இம்மூன்று பதங்களையும் தெளிவாக விளக்குக.

(08 புள்ளிகள்)

(ஆ) "தேசியரீதியில் கல்வியின் இலக்கு அடையப்படவேண்டுமாயின் பாடசாலையின் வகுப்பறைச் செயற்பாட்டில் கற்றல், கற்பித்தல் நிலைமையில் ஆசிரியரினால் விஷேட குறிக்கோள் அடையப்படவேண்டும்." இக் கூற்றானது இடைநிலைப் பாடசாலையில் எவ்வாறு வினைத்திறனாக அமைகின்றதென்பதை விளக்குக.

(12 புள்ளிகள்)

02.(அ) அறிகையாட்சிக் கல்விக்குறிக்கோளைப் பகுப்பாய்வு செய்கையில் அறிவுவிருத்தி, அறிவாற்றல் விருத்திபற்றி பெஞ்சமின் புளூம் கூறிய விடையங்களைச் சுருக்கமாக விளக்குக.

(10 புள்ளிகள்)

(ஆ) மாணவனின் மனப்பான்மை, விருப்பு ஆகிய நடத்தை மாற்றங்களை அளவிடக்கூடிய முறையொன்றினை விளக்குக.

(10 புள்ளிகள்)

03. (அ) இன்று பாடசாலையில் நடைமுறையில் காணப்படும் 5E முறையிலான கற்பித்தல் திட்டமொன்றினை எவ்வாறு முன்னெடுத்து நடைமுறைப்படுத்துவீர் என்பதைத் திட்டமிடுக.

(12 புள்ளிகள்)

(ஆ) செயற்றிட்டமுறையொன்றின் மூலம் நீர் கற்பித்தலை மேற்கொள்வதற்கான திட்டமொன்றை முன்வைக்குக.

(08 புள்ளிகள்)

04. (அ) வகுப்பறை முகாமைத்துவமானது கற்றல் கற்பித்தல் செயற்பாட்டில் எவ்வாறான தாக்கத்தை ஏற்படுத்துகின்றதென்பதை விளக்குக.

(08 புள்ளிகள்)

(ஆ) "வகுப்பறை முகாமைத்துவம் தொடர்பாக ஆசிரியர்கள் ஆற்றவேண்டுமென எதிர்பார்க்கப்படுகின்ற பாடசாலைச் செயற்பாடுகள் எவ்வளவுதூரம் வினைத்திறனாக அமைகின்றதென்பதை ஆராய்க.

(12 புள்ளிகள்)

05. (அ) மாணவனின் அடைவு மட்டத்தை அளவீடு செய்வதற்கு பாடசாலையில் பயன்படுத்தப்படும் சோதனை முறைகளைச் சுருக்கமாக விளக்குக.

(12 புள்ளிகள்)

(ஆ) "நியமச் சோதனை முறையின் பயன்பாடுபற்றிச் சுருக்கமாக விளக்குக.

(08 புள்ளிகள்)

06. பின்வருவனபற்றிச் சுருக்கமாக விளக்குக.

(அ) பிரச்சினை தீர்த்தல் கற்பிக்கும் முறை.

(ஆ) பல்தரக் கற்பித்தல் முறை.

(இ) தர உள்ளீடு.

(ஈ) பாடசாலை மட்ட முகாமைத்துவம்.

(4 x 5 = 20 புள்ளிகள்)

EASTERN * LI...
18 JUL 2014

07. (அ) “சிறந்த வகுப்பறை முகாமைத்துவம் வினைத்திறனான ஆசிரியர்களை உருவாக்கும்” இடைநிலைப் பாடசாலைகளில் இக்கூற்று தற்போது எந்தளவிற்கு நியாயப்படுத்தக்கூடியதாக இருக்கின்றதென்பதை விளக்குக.

(10 புள்ளிகள்)

(ஆ) சிறந்த வகுப்பறை முகாமைத்துவ உத்திகளை எடுத்துக்கூறி இதில் “நேரம் தவறாமை ஆசிரியர்களை சிறந்தவொரு வாண்மைவிருத்திக்கு இட்டுச் செல்லும்” என்ற கூற்றினை நியாயப்படுத்துக.

(10 புள்ளிகள்)

08. (அ) இடைநிலைப்பாடசாலைகளில் ஆசிரியர்கள் வினாக்களைத் தயாரிப்பதில் புளுமின் பகுப்பாய்வு முறை எவ்வளவு முக்கியத்துவம் பெறுகின்றதென்பதை விளக்குக.

(12 புள்ளிகள்)

(ஆ) “வகுப்பறைக் கற்றலை இலகுபடுத்தும் முறைகளில்,

i) பௌதிக சூழல்

ii) உளவியல் சூழல்

iii) சமூகச் சூழல்

ஆகியவற்றின் முக்கியத்துவம் பற்றி விளக்குக.

(08 புள்ளிகள்)